**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 58/2021**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு. இராஜா முகமது, மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873-ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் **29** -ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 29.11.2024**

**பெயர் - பாக்கியலெட்சுமி**

**க/பெ - ரங்கநாதன்**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 3.35. p.m.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

2. (1). 23.11.1998 தேதியிட்ட பாகப்பரிவினைப் பத்திரம் ஆவண எண் 4552/1999 என சார்பதிவாளர் திருவொற்றியூர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ1** எனவும். **(மேற்படி ஆவணத்தின் அசல் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை எழுப்பபட்டு அதற்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது).**

(2). 17.10.2007 தேதியிட்ட ரங்கநாதன் என்பவரின் இறப்பு சான்றிதழ் அசல் **வா.சா.ஆ2** எனவும்.

(3). 27.01.2009 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணம், ஆவண எண் 390/2009 என சார்பதிவாளர் திருவொற்றியூர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டதன் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ3** எனவும்.

(4). 31.10.2018 தேதியிட்ட ரங்கநாதன் பெயரில் உள்ள அசல் சொத்து வரி பொது சீராய்வு அறிவிப்பு அசல் **வா.சா.ஆ4** எனவும்.

(5). 26.07.2021 தேதியிட்ட வாதிகளுக்கு 1-ம் பிரதிவாதியால் அனுப்பட்ட சட்ட அறிவிப்பின் அசல் **வா.சா.ஆ5** எனவும்.

(6). 10.08.2021 தேதியிட்ட பிரதிவாதியின் வழக்கறிஞருக்கு வாதிகளாகிய நாங்கள் அனுப்பிய அலுவலக நகல் மற்றும் அதற்குண்டான அசல் பதிவஅஞ்சல் ரசீது **வா.சா.ஆ6** எனவும் **(வரிசை 1 முதல்2 வரையிலானவை).**

(7). மேற்படி அறிவிப்பினை பிரதிவாதியின் வழக்கறிஞர் பெற்றுக் கொண்டமைக்கான அசல் அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.சா.ஆ7** எனவும்.

(8). 24.09.2021 தேதியிட்ட தாவா சொத்திற்குண்டான வில்லங்க சான்றிதழ் 07.09.1998 முதல் 06.09.2021 கால வரையறைக்கானது கணினி வழி எடுக்கப்பட்ட நகல் **வா.சா.ஆ8** எனவும். **(மேற்படி வில்லங்க சான்றிதழ் சான்றிட்ட நகலாக தாக்கல் செய்யப்படவில்லை என் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை எழுப்பப்பட்டு அதற்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**

(9). சமையல் எரிவாயு வாங்கியதற்கான ரசீது கணினி வழி எடுக்கப்பட்ட நகல் **வா.சா.ஆ9** எனவும். **(மேற்படி வில்லங்க சான்றிதழ் சான்றிட்ட நகலாக தாக்கல் செய்யப்படவில்லை என் பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபணை எழுப்பப்பட்டு அதற்குட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது)**

(10). முதல் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்ட ஒளி நகல் **வா.சா.ஆ10** எனவும்.

(11). 2-ம் வாதியின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்ட ஒளி நகல் **வா.சா.ஆ11** எனவும் குறியீடு செய்யப்படுகிறது.

**(மேலும் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம்- 4.00. p.m.**